இலங்கை வங்கியினால் முழுமையாக உரிமம் கொள்ளப்பட்ட துணை நிறுவனமான BOC IT சொலூஷன்ஸ் (வரையறுக்கப்பட்ட) நிறுவனம் கீழே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு தகுதிவாய்ந்த, அனுபவமிக்க, துடிப்பான மற்றும் விளைவுகள் சார்ந்த மனப்பான்மையுடைய இளம் நபர்களை எதிர்பார்க்கின்றது.

ஆவண மற்றும் தரக் கட்டுப்பாட்டாளர் (ஒப்பந்த அடிப்படை)

1. கல்வித் தகைமைகள்

- தகவல் தொழில்நுட்பம் அல்லது தொடர்புடைய துறையில் இளங்கலைமாணி பட்டம் (தயவு செய்து உங்கள் விண்ணப்பத்துடன் பிரதிகளை இணைக்கவும்).

2. தொழில்முறைத் தகுதி

- ISO 9001 சான்றிதழ் உட்பட பின்வரும் தகவல் தொழில்நுட்பத் துறைகளில் தொழில்முறைச் சான்றிதழ்கள்
- ITIL அடிப்படை, COBIT சான்றிதழ்கள், ISO 20000 செயற்படுத்துகை

3. கடந்த கால பணி அனுபவம்

- செயன்முறை ஆவண முகாமைத்துவம் / தரக் கட்டுப்பாடு என்பனவற்றில் குறைந்தபட்சம் இரண்டு (02) வருட அனுபவம்
- தொழில்நுட்ப எழுத்து, தர உறுதிப்பாடு மற்றும் கட்டுப்பாட்டு என்பனவற்றில் சிறந்த நடைமுறைகள் மற்றும் தரநிலைகள் பற்றிய அறிவு

4. வயது எல்லை

- இறுதித் திகதியின்படி, 35 வருடங்கள் அல்லது அதற்குக் குறைந்ததாக இருத்தல் வேண்டும்.

5. ஒப்பந்தக் காலப்பகுதி

- மொத்த ஒப்பந்தக் காலம் 03 வருடங்கள் (ஆண்டுதோறும் செயற்திறன் மதிப்பாய்வுக்கு உட்பட்டது)

6. சம்பள அளவு

- பேசித் தீர்மானிக்கப்படும் விண்ணப்பதாரியின் சுய விருப்பத்தின் அடிப்படையில் கவர்ச்சிகரமான சம்பளப் பொதி வழங்கப்படும்.

7. ஏனைய பண்புகள்

- சுயமாக உந்தப்பட்ட மற்றும் விளைவுகளை நோக்கிய பண்பு
- சிறப்பான, பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய திறன்களுடன் கூடிய உயர்ந்த புத்தாக்கம்
- சாதாரண பணி நேரங்கள் மற்றும் வார இறுதி நாட்கள் / விடுமுறை நாட்களில் பணியாற்றக்கூடிய ஆற்றல்

விண்ணப்ப நடைமுறை

- விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை, பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, அனைத்துக் கல்விசார் தகைமைச் சான்றிதழ்கள் மற்றும் அனுபவத்தை நிரூபிக்கும் ஆவணங்கள் என்பவற்றின் பிரதிகளை இணைத்து, காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்பட்ட பதவியைக் குறிப்பிட்டு, கீழே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு **2026/11/25** ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட தகைமைகளை விண்ணப்பிக்கும் இறுதித் திகதியன்று பூர்த்தி செய்யத் தவறும் விண்ணப்பங்கள் அல்லது பொருத்தமான துணை ஆவணங்களுடன் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பங்கள் அல்லது பிழையான தகவல்களைக் குறிப்பிட்டு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் அல்லது விண்ணப்ப இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் என்பன எந்தவித மேலதிக அறிவித்தலும் இன்றி ஆட்சேர்ப்பின் எந்தக் கட்டத்திலும் நிராகரிக்கப்படும்.

பிரதம நிறைவேற்று அதிகாரி
பி ஓ சி மனேஜ்மன்ட் அன்ட் சப்போட் சேர்விசஸ் பிறைவேற் லிமிடெட்
(வரையறுக்கப்பட்ட நிறுவனம்)
18வது மாடி இலங்கை வங்கி - தலைமை அலுவலகம்,
'BOC சதுக்கம்', இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 476 4891
மின்னஞ்சல்: career@bocits.lk

BOC IT Solutions (Pvt) Ltd
(A fully owned subsidiary of the Bank of Ceylon)

• எந்த வகையிலான விளம்பரம் செய்து ஆதரவு கோருதலும் உடனடி தகுதியின்மையாகக் கருதப்படும். • தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் அழைப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. • தேவைப்படும் ஆளணியின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கான உரிமைகளையோ அல்லது ஆட்சேர்ப்பை ஒத்திவைக்கவோ அல்லது இரத்துச் செய்யவோ உரிமை உள்ளது.